சிக்கனம் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

வருஷம் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 25 வெள்ளிக்கிழமை (10-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 286

தமிழர் சுயநிர்ணய உரிமையை பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டும்

பிரதமர் மேயரிடம் நேரில் கடிதம்

லண்டன், செப்டெம்பர் 10

ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்குச் சர்வதேச ரீதியான அங்கீகாரம் கிடைப்பதற்கு உதவுமாறு தமிழர்களின் சர்வதேச கூட்டிணைப்பு அமைப்பு பிரிட்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேயரிடம் நேற்று முன்தினம் நேரில் கையளிக்கப்பட்டது.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்குமாறு பதினைந்து மனித உரிமை அமைப்புகள் ஏற்கனவே உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன.

அந்தக் கோரிக்கைக்கு ஆதரவளிக்குமாறும், சர்வதேச ரீதியான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உதவுமாறும், தமிழர்களின் சர்வதேசக் கூட்டிணைப்பு அமைப்பு பிரிட்டனிடம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான கடிதம் ஒன்று நேற்று முன்தினம் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரிடம் நேரில் கையளிக்கப்பட்டது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளை சர்வ

(5 ஆம் பக்கம் பார்க்க)

வதிரியில் தமிழீழ நீதிமன்றம் நேற்று திறந்துவைக்கப்பட்டது

வழக்கு விசாரணையும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 10

தமிழீழத்தில் மூன்றாவது நீதிமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு வரணி வெட்டிப்பகுதியில் வதிரியில் திறந்து வைக்கப்பட்டது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. குமரன் நாடாவை வெட்டி நீதிமன்றத்தை திறந்து வைத்தார்.

தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் திரு. பொன் நியாகம் மங்கள விளக்கையும், தமிழீழ கல்வி கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன், தமிழீழ தேசியக் கொடியையும் அங்கு ஏற்றி வைத்தனர்.

நீதிமன்றம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றே வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின. திரு. ஜனகன், திரு. ஒப்பிலான், திரு. ஜேசுதாஸ் ஆகியோர் அங்கு நீதியாளர்களாகக் கடமை யேற்றனர்.

பருத்தித்துறை காவல்துறை பணிமனைப் பொறுப்பாளர் வழக்குகளை நெறிப்படுத்தினார். மூன்று வழக்குகள் அங்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

(இ-5)

ஆயுதம் தரித்த குழுவினர் மலையகத்தில் ஊடுருவல்

கொழும்பு, செ. 10

மலையகத்தினுள் பதுளை மாவட்டத்தில் ஆயுதந்தரித்த ஆட்கள் ஊடுருவல் செய்துள்ளனர்.

ஒரு தேசிய வாரப்பத்திரிகை இது பற்றி பிரஸ்தாபித்துள்ளதாக சண்டே லீடர் செய்தி தெரிவித்தது.

தென்பகுதி தோட்டங்களில் அதிருப்தி அலை ஏற்பட்டிருப்பதாகவும் —

இன அதிருப்தி குழுக்கள் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்யும் விதத்தில் இரகசிய சட்டவிரோத நடவடிக்கைகளை மீண்டும் தூண்டி விடும் முயற்சியில் அக்கறை காட்டுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மலையகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றி பொலீஸார் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

காலி, மாத்தறை மற்றும் சப்ரகமுவா பகுதிகளில் 36 தேயிலைத் தொழிற்சாலைகள் உற்பத்தியை நிறுத்தி விட்டன.

இவ்வாறு சண்டே லீடர் வார இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-த-எ)

பூநகரியில் மோதல் 2 சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம், செப். 10

பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையே மோதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடகச்சாளர் பிரிகேடியர் நளின் ஹேமமன விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி—கல்முனைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும்—அச் சம்பவத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ண ஜெயந்தி விழா நடந்த வேளை ஷெல் வீச்சு!

பொன்னாலை ஆலயத்தில்

சுழிபுரம், செப். 10

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆலயச் சுற்றாடலில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

இரவு எட்டு மணியளவில் காரைநகரிலிருந்து ஆலயத்தை நோக்கி ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

ஆலய வெளி வீதியில் உள்ள பிள்ளையார் சிலைக்குப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

கப்பமாக ரூ. 20 ஆயிரம் கேட்டு கனடாவில் தமிழரைகடத்திய தமிழர்கள் இருவர் கைது!

கொழும்பு, செப். 10

கனடாவில் இலங்கைத் தமிழர் ஒருவரை 20 ஆயிரம் ரூபா கப்பம் கேட்டு கடத்திச் சென்றதாகக் கூறப்படும் இரு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இன்னொருவர் தேடப்பட்டு வருகின்றார்.

கார் ஒன்றில் அந்த இலங்கைத் தமிழரைக் கடத்திச் சென்றவர்கள் இலங்கையில் உள்ள அவர்களது பெற்றோருடன் தொலைபேசி எடுக்கும்படி அவர்களைக் கட்டாயப் படுத்தினார்கள் என்றும்—

கனேடியப் பொலீஸார் கடத்தல்காரர்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மண்எண்ணெயுடன் றுகுணு அடுத்த வாரம் இங்கு வரும்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். மாவட்டத்துக்கான ஒருதொகுதி மண்எண்ணெய் பரல்களை ஏற்றிக்கொண்டு 'றுகுணு' கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறையை வந்தடையும் என நேற்று மாலை கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

யாழ். அரச அதிபரின் பெயரில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இந்தக் கப்பல் உரம் மற்றும் இருமிநாசினிகளை பருத்தித்துறையில் இறக்கிய பின்னர் இங்கிருந்து புறப்பட்டு தற்போது கொழும்பு சென்றுள்ளது அந்தக் கப்பலில் மண்எண்ணெய் பரல்களை ஏற்றும் வேலை கொழும்பில் இன்று ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

திருமலையில் இருந்து மாவை ஏற்றிக்கொண்டு 'வாஜுவ' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிவரும் சோமாரி, (குமாரி) கப்பல் நாளை மாலை அல்லது நாளை மறுதினம் ஞாயிற்று இங்கிருந்து கொழும்பு புறப்படவுள்ளது. (ஒ-173-5-9)

சிறிமாவோவுடன் ஈ.பி.டி.பி. சந்திப்பு

ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நிகழ்ந்த இந்த சந்திப்பின்போது, இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருமாறு ஈ.பி.டி.பி.யினர் கோரிக்கை விடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-6)

இஸ்ரேல் - பலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்றை ஒன்று அங்கீகரித்தன

13 ஆம் திகதிவாஷிங்டனில் ஒப்பந்தம் கைச்சாத்து

லண்டன், செப். 10

இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் நேற்று ஒன்றை ஒன்று அங்கீகரித்தன.

சமாதான ஒப்பந்தம் ஒன்று இம் மாதம் 13 ஆம் திகதி வாஷிங்டனில் கைச்சாத்தாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டதை அடுத்து ஒப்பந்தத்துக்கு எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளும் இஸ்ரேல் பிரதிநிதிகளும் நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் கடந்த சில நாட்களாக நடத்திய இரகசியப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக தற்போது ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு முன்னோடியாக இரண்டும் ஒன்றை ஒன்று அங்கீகரித்துள்ளன.

பலஸ்தீன இயக்கத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான தீர்மானத்தை நேற்று ஜனாதிபதி யாசர் அராபாத் ஒரு மனதாக நிறைவேற்றினார்.

இஸ்ரேலை அங்கீகரிக்கும் தஸ்தாவேஜுவில் யாஸீர் அராபாத்தின் கையெழுத்தை பெற்ற பின்னர் இஸ்ரேலின் உதவியோடு பரல் அங்கீகாரத்துக்கான ஆவணம் ஜெருஸலம் சென்று ஏற்பாடாகி இருந்தது.

இஸ்ரேலின் அமைச்சரவை நேற்று விசேடமாகக் கூடி பலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்தது

13 ஆம் திகதி கைச்சாத்திடப்படும் ஒப்பந்தத்தின்படி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள காஸாவிலும் ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் பலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்படும்.

அந்த இரு பகுதிகளில் இருந்தும் இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறும்

பூரா குடியிருப்புள், மற்றும்
(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரிகளைச்

சித்திராலயா

சிந்தை மகிழ வாழ்த்துகிறது

அரிதின் முயன்று சிரத்தையோடு ஆழமாகக் கற்றுத் தடைகளைத் தாண்டிப் பரீட்சையில் சித்தி பெற்றுப் பட்டதாரிகளாய் சிந்தை மகிழ வெளிய வரும் நம்பியர், நங்கையரினை நாமும் உள்ளன்போடு பாராட்டி வாழ்த்துகிறோம். வாழ்க! வெல்க!

சித்திராலயா

18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: எம்மிடம் மஞ்சள் (Yellow), கறுப்பு (Black) பல்கலைக்கழக மேலங்கிகள் (Cloak) உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(பி-6082)

சிவமயம்

யாழ். இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

காலம்: இன்று 10 — 09 — 1993 வெள்ளி
காலை 9.00 மணி

இடம்: விசாலாட்சி மண்டபம்

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை,
பதில் துணைவேந்தர் / கலைப்பீடாதிபதி - யாழ். பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்:
வை. இளங்குமரன்,
[பொறுப்பாளர், கல்வி மேற்பார்வைக் கழகம்]

பரிசில் வழங்குபவர்:
திருமதி இராசலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை,

பெற்றோர், நலன் விரும்பிகள், பாடசாலை அபிமானிகள், சிறப்பு விருந்தினர், பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
(பி-6065) பொன்விழாச் சபையினர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பொன் விழா ஆண்டின்

கலை விழா

- இரண்டாம் நாள் -

பழைய மாணவிகள் வழங்கும் நிகழ்வுகள்:

காலம்: இன்று 10—09—1993 வெள்ளிக்கிழமை
மாலை 4-30 மணி

இடம்: கல்லூரி திறந்தவெளி அரங்கு

தலைவர்: செல்வி புஷ்பா செல்வநாயகம்,
(தலைவர், பழைய மாணவிகள் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி)

பிரதம விருந்தினர்: திரு கி. வேலாயுதம்,
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி கோட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ. மகாலிங்கம்,
(மேலதிக அரச அதிபர், நல்லூர்)
திரு. இதயன்,
(பொறுப்பாளர், மாணவர் அமைப்பு யாழ். கோட்டம்)

நிகழ்ச்சி நிரல்

5-00 — 5.15 புஷ்பாஞ்சலி
5.20 — 6-05 கொழுமபில் கல்யாணம்
(நாடகம்)
ஆக்கம்: அரசலியூர் சுந்தரம்பிள்ளை
6-10 — 6-30 தனி நடனம்
6.35 — 7.05 பல்லியம்
7-10 — 7.40 குழு நடனம்
7-45 — 8.00 தனி நடனம்
8-05 — 8.45 இனியொரு விதி செய்வோம்
(கவிதா நிகழ்வு)

நன்றியுரை: திருமதி ம. பரமநாதன்,
(செயலாளர், பழைய மாணவிகள் சங்கம்)

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பொன் விழாச் சபையினர்.

விளம்பர அன்பளிப்பு:

வேலணை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

சரஸ்வதி பவான்
149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(பி-6066)

கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 1994 பகல் நேர வகுப்புகள்

DAY CLASSES

பாடம்	ஆசிரியர் குழு	பிரிவு I	பிரிவு II	பிரிவு III
பொருளியல்	— திரு. உதயன்	— 10—12	8—10	1— 3
கணக்கியல்	— திரு. ஸ்ரீ	— 8—10	10—12	12— 1
வர்த்தகம்	— திரு ரட்ணம்	— 7— 9	7— 9	7— 9
அளவையியல்	— திரு. சயந்தன்	— 9—10	9—10	9—10
இ. நாகரிகம்	— திரு ஜோதீஸ்வரன்	— 11—12	11—12	11—12
தமிழ்	— திரு தங்கராசா	— 12— 1	12 — 1	12— 1
அரசியல்	— திரு பஞ்ச	— 1— 2	1— 2	1— 2
புவியியல்	— திரு வேலா	— 10 - 11	10—11	10—11
இ. நாகரிகம்	— திரு. நோபேட்	— 11—12	11—12	11—12

குறிப்பு:

1. பொருளியல், கணக்கியல் வகுப்புகள் செவ்வாய், வியாழன். ஏனைய பாடங்கள் சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும்.
2. பிரிவு - I அனுமதிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. பிரிவு-II, பிரிவு-III ஆரம்பம்: 14—09—1993 செவ்வாய்
3. பிரிவு-I, II முழு வினா-விடை வகுப்புகளும் மயிற்சிகளும் 79 ஆண்டு முதல் நடைபெறும்.
4. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொண்டு அனுமதிகளை உறுதிப் படுத்தவும்.

(பி-6083)

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna

அறிவித்தல்

தாவரவியல் வகுப்புகள் யாவும் வழமையான நேர அட்டவணைப்படி 11-9-93 இல் இருந்து நடைபெறும்.

(6084)

NEW SCIENCE HALL
KANNATHIDDY Rd, JAFFNA.

94 A/L

துரித மீட்டல்

PURE & APPLIED MATHS
By
Mr. குணசிங்கம்
B. Sc.

செவ்வாய் / வியாழன் 3-00 — 5.00 p.m.

(பி-5905)

எடிசன்
அக்கடமி
(யாழ். இந்து அருகில்)
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
BY
BRITTO

சனி, ஞாயிறு
2.00 — 3.00 மணி

ஆரம்பம்:
11 — 9 — 1993
சனி 2 மணி

(27236)

BECON
STANLEY ROAD,
JAFFNA.

அளவையியல்
S. S. மனோகரன்
மீட்டல், வினா-விடை வகுப்பு
சனி, ஞாயிறு 9—10 a.m.

ஆரம்பம்:
10-9-1993
காலை 9 மணி.

✶ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்வும்.

(பி-6081)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
08
12
1941

விண்ணில்:
13
09
1990

அமரர் கந்தையா கோபாலபிள்ளை

(பிரபல வர்த்தகரும், கோபால் அன் சன்ஸ் உரிமையாளரும்.)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் இருந்தீர்கள் அப்பா! வருடம் மூன்று சென்றாலும் உங்கள் திருமுகம் காணாமல் தவிக்கின்றோம் அப்பா! விண்ணோரை மகிழ்விக்க விரைந்திட்ட உங்களுக்கெம் கண்ணீரே அன்றி வேறு காணிக்கை யேது அப்பா!

இவர் பிரிவால் கவலையில் வாழும்.
மனைவி, மக்கள்.

51, கண்டி வீதி,
கச்சேரி,
யாழ்ப்பாணம்.

(6473)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 04 — 01 — 1924

உதிர்வு: 22 — 08 — 1992

சின்னத்தம்பி நல்லையா

(முன்னாள் பாராளுமன்ற சபை உத்தியோகத்தர்)

திதி: 10-09-1993

எம் வாழ்விற்கு ஒளி விளக்காய் நின்று அன்புடன் வழிகாட்டி பண்புடன் வாழ வைத்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரி

51, அரச வீதி,
நல்லூர்.

(27246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி

நிறுவுனர் நினைவு மலர்

10 – 09 – 1993

நன்றியோடு நிற்காது நற்செயல்கள் நிகழவேண்டும்

மனத் தூய்மையும் ஒழுக்கசீலமும் படைத்த வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள், தங்கள் மன நினைவிலே, "இவ்வுலக மக்களின் உயர்ந்த வாழ்வுக்கு உடம்போடு உயிரைப் பாதுகாத்தல், அறிவை வளர்த்தல், நன்நெறியில் ஒழுகுதல் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் அமைந்திருப்பன" என்றும்; இவற்றுள், "உடம்போடு உயிரைப் பாதுகாத்தலுக்கு நல்ல உணவும், அறிவை வளர்ப்பதற்கு உயர் கல்வியும், நன்னெறியில் ஒழுகுவதற்கு சிவன் வழிபாடும் முக்கியமானவை" என்றும் நன்கு அறிந்து கொண்டவர் ஆவார்.

அதனாற்றான், உணவிற்காக அன்னசத்திரத்தையும், கல்விக்காக ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியையும், நன்னெறிக்காக சிவன் கோயிலையும் அமைத்ததோடு, தாமே முன்னின்று, முன்னேற்றத்துக்கு "வழிகாட்டி"யாயும் நின்றார்.

இவற்றோடு மாத்திரமன்று தமக்குப் பிறகாலத்திலும் அவற்றைப் பராமரித்துப் பாதுகாப்பதற்காக அறக்கட்டளையும் தந்து உதவினார்.

இந்த நற்செயல்கள் யாவும் தமக்குப் பதிலுதவிகளை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்களுடைய காலத்திலே சமுதாயச் சூழ்நிலைகளைத் தாமே ஆராய்ந்து, நிலையில்லாத தம்பொருட்செல்வத்தைப் பயன்படுத்தி, நிலையான கல்வி – ஒழுக்க – கல்விச் செல்வங்களைச் சமூகத்துக்கே சேரும் வண்ணம் ஈந்தார்கள்.

அவர் செய் நன்றியை நாம் என்றும் மனதிற் கொண்டு அவர் வழியில் முன்னேறுவோம்.

வாழ்க அறவள்ளலின் புகழ்!
வளர்க ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி!!

வே. சந்திரசேகரம்பிள்ளை,
கொத்தணி அதிபர்,
புத்தூர்.

நாவலர் வழிச் சைவப் பெரியார் மழவராயர் கந்தையா மகத்தானவர்

[illegible] மாவட்டத்தில் செந்தமிழ் மணமும் சைவத் திருமுறை மணமும் கமழப் பணிபுரிந்த நாவலர் வழிச் சைவப் பெரியார்களில் புத்தூர் மழவராயர் கந்தையா மகத்தானவர்.

இன்றைய நாளில் கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த சொத்துப்பத்துக்களை நன்கொடையாக வழங்கி 1931இல் சோமஸ்கந்த வித்தியாலயத்தை ஆரம்பித்து வைத்தார் தனது பெயரை வைக்காது; சிவம், உமை, கந்தன் மூவரும் சேர்ந்த தியாகராஜ முகூர்த்தத்தின் பெயரை வைத்ததே உலக நன்மைக்கான தாபகரது பரோபகார சிந்தனையைத் தெளிவாக்குகின்றது.

செய்நன்றி மறவாது அமரரின் பிறந்த நாளில் விழாவினை எடுக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டி விழாச் சிறப்புற என் நல்லாசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு இ. சுந்தரலிங்கம்,
கல்விப் பணிப்பாளர்,
யாழ் மாவட்டம்.

கொடைவள்ளல் கல்விப் பணி

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு தமது அரும் பணித்துப் பணியாற்றியோர் வரிசையில் அமரர் மழவராயர் கந்தையா அவர்களை எவரும் மறக்க முடியாது.

அவரது நோக்கங்களும் சிந்தனைகளும் நிறைவேறக் கூடியதாக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி வளர்ச்சியடைந்துள்ளது. புத்தூர் வாழ் மக்கள் மட்டுமன்றி எமது பிரதேச மக்கள் அனைவரும் அப்பெருமகனை நினைவு கூர்ந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இப்பெரியாரின் பிறந்த நினைவை கல்லூரி நிறுவுனர் தினமாகவும் பரிசு நாளாகவும் கொண்டாடி வருவது மிகவும் பொருத்தமானதாகும். இன்று நடைபெறும் விழா சிறப்புறவும் நிறுவனத்தினர் கொடைவள்ளல் மழவராயர் கந்தையாவின் கல்விப் பணிகள் சிறப்புறவும் எனது வாழ்த்துக்கள்.

இ. சிவானந்தன்,
பிரதேசக் கல்விப்பணிப்பாளர்,
மருதனார்மடம்.

வாழ்த்துச் செய்தி

தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் காணும் செப்டெம்பர் பத்து நன்னாளில் தாபகர் மழவராயர் கந்தையாவின் நாமமாய், பெற்றோரின் கனவாய், பிள்ளைகளின் நலனாய், ஆசிரியரின் தன்னலமற்ற உயர் சேவையாய் சோமஸ்கந்தா பொலிவில் பூரணமாகி சான்றாண்மை மிக்க எதிர்காலத்தினை உருவாக்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை.

அமரர் மழவராயர் கந்தையா

யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி
புத்தூர்

நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

காலம்: 10.09.1993 வெள்ளிக்கிழமை 9 மணி
இடம்: கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை, அதிபர்
பிரதம விருந்தினர்: உயர்திரு எஸ். இரத்தினராசா பிரதிக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்
சிறப்பு விருந்தினர்: கல்வி புதுவை இரத்தினதுரை கலை, கலாசார பொறுப்பாளரும் எமது பழைய மாணவரும்.
பரிசில்கள் வழங்குபவர்: திருமதி எஸ். இரத்தினராசா

★ கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்

ஸ்தாபகர் இலட்சியமும்
கல்லூரியும் சிறப்புற
வாழ்த்துகிறோம்

அம்பாள் புடைவை அகம்
பிரதான வீதி, புத்தூர்.

துர்க்கா றேடேர்ஸ்
(சைக்கிள் உதிரிப்பாகம், பல்பொருள் விற்பனை)
பிரதான வீதி, புத்தூர்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்
46, யாழ் – பரு. வீதி, புத்தூர்.

சரஸ்வதி விலாஸ்
புத்தூர்

புத்தூர் எரிபொருள் விற்பனை நிலையம்
புத்தூர்.

★ஸ்ரீ கிருஷ்ணா கிறைன்டிங் மில்★
பிரதான வீதி, புத்தூர்

லிங்கம் சிக்ஸ் ஹவுஸ்
புத்தூர்.

NEW SCIENCE ACADEMY
எழிலகம் முன்பாக, யாழ்நகர்.

94 A/L
ZOOLOGY
Paper Classes
BY
திரு. தம்பிராஜா
B. Sc
ஆரம்பம்:
11 – 9 – 1993
பிரிவு I – 10.00
பிரிவு II – 1.00
Saturday & Sunday Classes
(சி-5904)

விக்னா கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 94
வினா – விடை
சனி, ஞாயிறு
வகுப்புகள்
பொருளியல் – க. கனகரன் 12 – 1
வர்த்தகம் – தேவா 10 - 11
கணக்கியல் – S. K. பிரபாகரன் 8.00 - 3.30
★ ஆரம்பமாகிவிட்டன ★
(சி-6061)

சமூகக்கல்வி
(O/L 1993)
மீட்டல்
வினா-விடை
அறிவொளி கல்விக் கழகம் நல்லூர் 10 – 11
சயன்ஸ் அக்கடமி நல்லூர் 7 – 8
அறி ஒளி கல்வி நிறுவனம் ஆனைக்கோட்டை 11 – 12
ஆரம்பம்:
11-09-1993
ஆசிரியர்:
க. கோபி
(சி 6078)

கலை, வர்த்தக கல்லூரி
C. C. A.
வெலிடன் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம்.
A/L 94
துரித மீட்டலும் வினா விடையும்
வர்த்தகம்:
திரு. இ. இரட்ணம்
ஆரம்பம்:
11 – 09 – 1993
காலை 7-00 மணி
நேர அட்டவணை

சனி	ஞாயிறு
7 9	7 – 9

குறிப்பு:
I) பாடத்திட்டம் முடிக்கப்படும்.
II) வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் நடைபெறும்.
(சி-6048)

வலி. கிழக்கு (வ. ம.) ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை
(விளம்பர இல. சி/5903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆண்களுக்குரிய புதிய ஹீரோ சைக்கிள் லைற், கரியர், ஸ்ரான்ட், பூட்டு ஆகிய வற்றுடன் விற்பனைக்குண்டு: தொடர்பு: சி. கருணாநிதி, கதிரமலைச் சிவன் கோயில் வாசல், சுன்னாகம். (6643)

நோயாளர் பாவிக்கக்கூடிய சிக்லு வண்டில் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு பார்வையிடலாம். ச. சூரியகுமார், வங்கனா ஒழுங்கை, மல்லாகம். (27244)

விற்பனையாகிறது

தமிழ் இலக்கியம் ஆண்டு 10—11 விளக்கக் குறிப்புகள் கம்பராமாயணம், நளவெண்பா நாலடியார் ஆசாரக்கோவை பெரியபுராணம் இயற்கைவளம் கணிதம் யில் விடுத்த ஓவை, நன்றிப் பெருக்கு மேலும் பயிற்சி வினாக்களுக்கு விடைகள் உள்ளடங்கியது. ஆக்கம்: தமிழவேள் பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-6055)

வியாழமாற்றம் நன்மையா

12-10-93இல் நிகழும் வியாழமாற்றம் நன்மை பயக்குமா? உலக இலக்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம். 10/- மட்டுமே. கிடைக்கும் இடம்: கனகா றேடேர்ஸ், திருநெல்வேலி. (27180)

சியாக்காய்ப்பவுடர்

ஆனந்தம் சியாக்காய்ப்பவுடர் சித்தமருத்துவ முறைப்படி சீவக்காய், பறு, வெந்தயம் உட்பட பல மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. கண்குளிர்ச்சி, கூந்தல் வளர்ச்சி, சுகமான வாழ்வுக்கு ஆனந்தம் சியாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்குங்கள். கிடைக்குமிடம்: திருவருள் கஞ்சியம், முருகன் கஞ்சியம், கண்ணன் கஞ்சியம், இராஜேஸ்வரி கஞ்சியம், கொடிகாமம் ஆகிய இடங்களில் கிடைக்கும். (சி-6058)

குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியக்கள் சுத்தமானவை சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு விநியோகம்: Siva Industries, 35/3, Colombagam Road, Chundukuli. (சி-6049)

வெளிவந்துவிட்டது

மீண்டும் O/L மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பரீட்சை நோக்கு வெளியாகிவிட்டது. சமூகக் கல்வி முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியது. சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆசிரியர்: S K சுகுந்தன். மொத்தமாக பெற்றுக்கொள்ள கிளம் மெடிக்கல் புத்தகசாலை, சாவகச்சேரி. (6469)

அச்சுக்கோப்பாளர் தேவை

அச்சுக்கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். பாரதி பதிப்பகம், (A.B. Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6077)

திருத்தவேலை

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்: டிக்கோ வாச் அண்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் கூல்பார் அருகில்). கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6068)

புலமைப்பரிசில் - 1994

1994 புலமைப்பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படும் தொடர் பயிற்சிப் பரீட்சையின் 9 ஆவது பரீட்சை 11-9-93 சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். விவாதத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் ஆங்கடமி, யாழ் இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27235)

ENGLISH

G C E. O/L 93 அகுரியான வகுப்புக்கள், Spoken English (with Grammar) மூன்று மாத பயிற்சி, [உலகியல் ரீதியாக] சனி, ஞாயிறு காலை 7-30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். R. சிவலிங்கம், (Dip in-Eng.) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், 32, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6081)

ஆண்டு - 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை 12-9-93 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தொடர்பு: நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (27243)

ஆண்டு - 4

1994 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் 11-9-93 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன. தொடர்பு: நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (27242)

இலவச திருமண சேவை

30 வயது, செவ்வாயற்ற, பூசம், U.K. I.C.M.A. மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் U.K இல் வேண்டும். சால மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27239)

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா - 1993

மேற்படி விழாவில் பங்குபற்றும் அனைத்து பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கு

எமது நல்வாழ்த்துக்களும், நல்லாசிகளும்

ஞானம்ஸ் ஸ்ருடியோ

உங்களை வரவேற்கின்றது.

யாழ். வளாக கொழும்பு / பேராதனை வளாக பட்டதாரி மேல் ஆங்கிகள் எம்மிடம் உண்டு.

முக்கிய குறிப்பு:

ஸ்ருடியோ இல. 1இலும் பிரத்தியேகமாக திருத்தி அமைக்கப்பட்ட ஸ்ருடியோ இல 2இலும் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5903)

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
21
09
1903

இறப்பு:
10
09
1983

அமரர் திருச்செல்வம் சவிரிமுத்து

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

அன்புள் பண்பும் பாசமும் நேசமும்
ஒருங்கே ஊட்டி நற்கல்வி புகட்டி
எமை வளர்த்த அருமைத்தந்தையாய்
கல்லறையில் உமை வைத்தோம்
காலமெல்லாம் உமை மறவோம்
இறைவனடி சேரவே இறைஞ்சி நிற்போம்.

இவரது ஆத்ம சாந்திக்காக இன்று 10-09-93 மாலை 5-00 மணிக்கு யாழ். புனிதவளியான் (O L R.) ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் பிரியாத் துயருறும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

41, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (27241)

விண்ணக வாழ்வின் 7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
30	11
—	—
03	09
—	—
1923	1986

பொன்னுத்துரை ஜோர்ஜ் இராஜசேகரம்

"சிலுவையதில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

இவரின் ஆன்ம சாந்திக்காக 11-9-93 சனிக் கிழமை காலை 7-00 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவுகூரும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

கோப்பாய்

(27237)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
வத்சலாதேவி பொன்னுத்துரை
(B. Sc)

ஆண்டவன் அடியில்:	ஆண்டவன் அடியில்:
19-01-1961	09-09-1990

திதி: 10 - 09 - 1993

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
அன்பும் பண்பும் அறிவுமுடன்
எங்கள் குடியின் விளக்காக
இயங்கி வந்த உன்பிரிவை
எண்ணி என்றும் மறக்காமல்
இரங்கி நாங்கள் வாடுகிறோம்
மண்ணில் நீதான் வணங்கிவந்த
மாயோன் மருகன் விநாயகன் தாள்
நண்ணி என்றுஞ் சிறப்புடன் நீ
நலமே வாழ அருள்செய்வாய்
என்று கூறி விநாயகன்தாள்
ஏத்தி ஏத்திப் பணிகின்றோம்.

குடும்பத்தினர்.

"பொற்பதி",
வேலணை. (17165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

பொய்யின் எண்ணங்கள்

வடக்கு - கிழக்கின் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல; வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே என்ற கருத்தை புதிய ஜனாதிபதி விஜேதுங்காவும் பிரதமர் ரணிலும் முன்வைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை நினைநிறுத்தி பிரசித்தப்படுத்தும் முயற்சியில் அவர்கள் இருவரும் தீவிரமாக உள்ளனர். பொதுக்கூட்டங்களில் பேசும்போதும், பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குச் செவ்விகள் வழங்கும் போதும் வடக்கு - கிழக்கு பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை என்றே கூறிவருகிறார்கள்.

பொய்யான கருத்தைத் திரும்பத் திரும்பக் கூறினால் அது மெய்யாகி விடும் என்று கருதியே அவர்கள் முழுப் பூசினிக்காயை சோற்றில் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு பொய் ஆயிரம் பொய்களின் வேர் என்பதை, பாவம், அவர்கள் அறியார்கள் போலும்!

தமிழர்களின் பிரச்சினையை அரசாங்கத்தினால் — இக்கணத் தலைவர்களினால் — தீர்க்க முடியவில்லை அதனைத் தீர்க்க அவர்கள் விரும்பவில்லை என்பதே உண்மை தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தினாலேயே அவர்களது உயிலமகளை வழங்கி ஒரு முடிவு காண்பதற்கு அரசாங்கம் பின்வடித்து வருகிறது.

அந்த நோக்கத்தையும், விருப்பமின்மையையும் மறைத்து, வடக்கு - கிழக்கில் போர் நடப்பது தமிழர் பிரச்சினையால் அல்ல; பயங்கரவாதம் தலைதூக்கி உள்ளதாலேயே என்று உலகத்தை நம்ப வைக்கும் முயற்சியே இது.

விஜே-ரணில் பொய்க்குள்ளிருந்து நஞ்சுத்தனமான இரண்டு எண்ணங்கள் வெளிக்கிளம்புகின்றன வடக்கு—கிழக்கில் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது; அதனை இன்னொழிப்பதற்காகவே அரசு அதற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்று தமிழர் மீது தான் திணித்த போரை சர்வதேசங்களுக்கு நியாயப்படுத்துவது ஒன்று.

அவ்வாறு நியாயப்படுத்தி, நாடு வைப்பதன் மூலம் தமிழர் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்ற வட்டத்துக்குள்ளேயே நிரந்தரமாக முடக்கிவைத்துக் கொள்வது இரண்டாவது.

இந்த இரண்டு நோக்கங்களையும் எய்துவதன் மூலம் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக வெளிஉலகில் இருந்து வரக்கூடிய அழுத்தங்களையும் நெருக்குதல்களையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்று விஜே - ரணில் குருவினர் கனவு காண்கிறார்கள்!

அவர்கள் "பயங்கரவாதம்" என்று பெயரிட்டுள்ள ஆயுதப் போராட்ட வடிவம் எடுத்துள்ள தமிழர்களின் உரிமைப்போராட்டம் ஏன் உருவானது என்ற ஒரு சிறிய கேள்விக்கு பக்கம் சாராமல் விடைகாண முயலும் எவரும் அரசின் "பச்சைப் பொய்"யை இலகுவில் புரிந்து கொள்வர்.

நாட்டில் இருப்பது தமிழர் பிரச்சினை என்பதைத் தெற்கின் இளந்தலைமுறைத் தலைவர்களான சந்திரிக்கா விஜயகுமாரணதுங்கா, காமினி திஸநாயக்கா ஆகிய இருவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தெற்கின் அரசியல்வாதிகள் நேர்மையாக நடக்கவில்லை என்றுகூட சந்திரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

போரின் உண்மை நிலையைப் பத்திரிகைகள் வெளியிட வேண்டும் என்றும், தமிழர் பிரச்சினையை பயங்கரவாதம் என்று அரசு கூறும் பொய்யை பத்திரிகைகள் அம்பலப்படுத்த வேண்டும் என்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்னா கேட்டுள்ளார்.

ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு உண்மையை மறைக்க முடியாது என்பதை அறியாதவர்கள் முட்டாள்களே!

'போர் உலா' வெளியீடு

யாழ்ப்பாணம், செப் 10

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லப்டன் மலரவன் (லியோ எழுதிய "போர் உலா" வெளியீடு விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கலை மன்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைப்பார்.

விடுதலைப் புலிகள் தலைமை இராணுவத் தளபதி திரு. பால்ராஜ் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (ஒ)

ஆலயத்தில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 10

சுழிபுரம் — பறாளை முருகன் கோயில்மீதான விமானத் தாக்குதலைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மேற்படி கோயிலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

கடந்த 27 ஆம் திகதி அரசபடைகள் நடத்திய ஏவுகணைவீச்சு, ஷெல்வீச்சு ஆகியவற்றால் ஆலய மண்டபங்கள், தேர், தேர்க் கொட்டகை ஆகியன சேதமாகியது குறிப்பிடத்தக்கது.

ஆலய பரிபாலன சபைச் செயலாளர் சு. சண்முகராஜா சிவசிறீமாஉண்ணாவிரதத்தை இரம்பித்து வைப்பார் (அ 18)

தபால்களை சேர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 10

குடாநாட்டில் சேகரிக்கப்படும் வெளியூர் தபால்களை 'குமாரி' கப்பலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது அதற்கு வசதியாக நாளை சனி காலை 8.30 மணிக்கு முன்னர் யாழ் பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் கடிதங்களை சேர்க்குமாறு யாழ் பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார். (இ-5

படையினர் சூடு அளவெட்டியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 10

அளவெட்டி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயில் பகுதியில் ஒருவர் காயமடைந்தார்.

கோயில் வடல் பகுதியில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த அளவெட்டிதெற்கைச் சேர்ந்த செல்லையா முருகானந்தன் (வயது 63) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

இன்று

தென்மராட்சி கோட்ட பொது வித்தியாலயங்களுடனான சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என நமிழ்ழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சி.இளம்பரிதி அறிவித்துள்ளார்.

இஸ்ரேல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகியவை தொடர்ந்து இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

1967 ஜூன் மாதம் நடைபெற்ற 6 நாள் யுத்தத்தில் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டவையே எகிப்தின் காஸா பிராந்தியமும் ஜோர்தானின் மேற்குக் கரையும் ஆகும்.

பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் ஒன்றை ஒன்று அங்கீகரித்த செய்தி நேற்று வெளியாகியதை அடுத்து இஸ்ரேல் அமைச்சர் ஒருவர் ராஜிநாமாச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாளிர் அரபாத்தின் பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் உள்ள தீவிரபோக்காளர்களும் அரபாத்துக்கு எதிராக கிளம்பி உள்ளனர். (இ)

தமிழர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச நீதி நிபுணர்கள் ஆணைக் குழு முன்னர் கண்டிருந்தது. ஆனால் அவ்வாறான பல வன்முறைகள் மீண்டும் அங்கு அரச படைகளால் இப்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்நிலையில் 15 அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகள் தமிழர்களின் சுய நிர்ணய உரிமைக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்கக்கோரி விடுத்த வேண்டுகோளுக்கு உரிய ஆதரவை வேண்டி நிற்கிறோம்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

கிருஷ்ண ஜெயந்தி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமீபமாக ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. அவ்வேளை ஆலயத்தில் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் இருந்தனர். அவர்கள் கிழக்கு வீதிப் பக்கமாக ஓடிப் பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

ஷெல் வீச்சு நடந்த போது வடக்கு வீதியில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் உற்சவகாலப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த இளைஞர் சேவைத் தொண்டர்களும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆலய உற்சவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் பகலில் தேர்த் திருவிழா அசம்பாவிதம் எதுவுமின்றி நடைபெற்றது. பெருந்திரளான பக்தர்கள் வந்திருந்தனர். (அ-28)

"சயன்ஸ் சென்ரர்" நடத்தும்

விலங்கியல் கருத்தரங்கு

11 - 09 - 93 — சனி 3 மணி

ஆசிரியர்:

Mr. R. ஈஸ்வரதாசன்

B.Sc (Cey.) Dip In Ed

★ நடைபெற்ற 93 A/L விலங்கியல் வினாத்தாள் புள்ளியிடல் பற்றியும் வினாக்களுக்கு விடையளிக்கும் முறையும் விளக்கப்படும்.

★ பரீட்சையில் தோன்றிய, தோன்றாத மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்கு கொள்ளலாம்.

அனுமதி இலவசம்

★ விலங்கியல் திருத்திய புதிய Marking Scheme ஐ பெற்றுக்கொள்ளலாம் — Botany, Physics, Chemistry தமிழாக்கம் செய்த திருத்திய Marking Scheme பெற்றுக் கொள்ளலாம்.

Personal

New Science Centre

Eliilakam Front Lane Jaffna.

(C/5909)

புலோலி

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

புலோலி கிழக்கு பருத்தித்துறை

பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர் 101/9

மேற்படி பதவிக்காக 13 — 08 — 1993 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் கோரப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி 31 — 08 — 1993 இல் இருந்து 18 — 09 — 1993 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

- தலைவர்.

(சி-5901)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக யாழ்நகர்.

O/L விஞ்ஞானம்

கடந்த கால வினாப்பத்திரங்களுடன் கூடிய துரித மீட்டல், வினா விடை வகுப்புகள்

ஆசிரியர்: தி. தவச்செல்வன்

ஆரம்பம்: 11 — 09 — 1993 சனி பி ப. 5-00 மணி

குறிப்பு: நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-5894)

ACKNOWLEDGEMENT

Rev-Louis Navaratnam Hitchcock

Mrs Suguna Rajendram and the members of the Hitchcock family sincerely thank the clergy of the Jaffna Diocese C. S I., all relatives, friends, Eesons, the Manipay, Navaly and Chavakachcheri parish, and all others who sent floral tributes, messages of condolences and assisted in numerous ways in their grief.

(27238)

எமது நேற்றைய வெளியீடு

அரவிந்சாமி, சுகன்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த

★ **தாலாட்டு** (ஒரிஜினல்)

சுப்பஸோ வீடியோ ஒடியோ சென்ரர்

198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(சி/5911)

ஒத்திவைக்கப்பட்டது

10 — 09 — 93 அன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த முத்தமிழ் கலைமன்றம் எழுதும் "கலை விழா" தவிர்க்க முடியாத காரணத்தால் 06 — 10 — 93 இல் நடைபெறுமென்பதை அறியத் தருகின்றோம்.

செ. பொன்னுத்துரை
ப. வில்லன்
கலை விழா பொறுப்பாளர்
முத்தமிழ் கலைமன்றம்

(27250)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

யழ்ப்பாணம்

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்

பொதுக்கூட்டம்

இடம்:- மன்ற மண்டபம்
(நல்லூர், பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் தெற்கு வீதி)

காலம்:- 12—09—1993 ஞாயிறு
காலை 10-00 மணி

அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ச. பாலசிங்கம் (பொருளாளர் இணைச் செயலாளர்)
சு. கணபதிப்பிள்ளை தலைவர்

(27249)

LONDON EXAMS

மே / யூன் — 93

C. I. M. A. (Stage — I)

I. A. B. (All Stages)

ஆரம்பம் நாளை

11 - 09 - 1993 — 8-30 மணி

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 வது குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C/5909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நிறைவேறிற்று. தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிஷேசத்தை விசுவாசியுங்கள் என்றார் (மாற்கு 1:15)

சகல மதத்தினருக்கும்; சகல இனத்தவருக்கும் ஓர் நற்செய்தி

பாவம், பயம், நோய், புகைத்தல், பேய், பில்லிசூனியம், மதுபானம், பிரச்சினைகள். கெட்ட பழக்கங்கள் வைத்தியரால் கைவிடப்பட்ட வியாதிகள் இவற்றிலிருந்து

இயேசு கிறிஸ்துவின் மூலம் விடுதலை

★ சுவிசேஷ தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகள் ★

இடம்	காலம்
இலங்கை பெந்தேகொஸ்தே சபை, இல. 111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.	1993 செப்டெம்பர் 11 சனி மாலை 4-00 1993 செப்டெம்பர் 12 ஞாயிறு காலை 9-00

ஏனைய கூட்டங்கள்: காலை 9மணிக்கு வேதபாடம்
காலை 10மணிக்கு காத்திருப்பு கூட்டம்

விசாரணைகள்: இலங்கை பெந்தேகொஸ்தே சபை
இல. 111, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

★ இலவச உட்பிரவேசம்
★ யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்
★ காணிக்கை சேர்க்கப்படமாட்டாது.

என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதேயில்லை (யோவான் 6:37)

(27245)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:	உதிர்வு:
02	16
—	—
12	09
—	—
1926	1987

அமரர் சுந்தரயா சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்)

திதி: 10 - 9 - 1993

அன்பைச் சொரிந்து எம்மை
ஆளாக்கி வைத்தவனை
இன்றும் நினைந்து மனம்
ஏங்கித் தவிக்கின்றோம்
சென்றாலும் ஆறாண்டு
நூறாண்டாய் ஆனாலும்
என்றும் இதயத்தே
ஏற்றித் தரித்திருப்போம்

மனைவி, மக்கள், மருமக்கள், முதலானோர்.

எஸ். கே. எஸ். அரிசி ஆலை,
கிராம்புவில்.
சாவகச்சேரி வடக்கு. (27247)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்	மறைவு
25	12
—	—
04	08
—	—
1930	1993
★	★

அமரர்

கதிரன் மார்க்கண்டன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்
கிறீன் வரோதயக் கல்லூரி, கல்லாகம்)

எமக்கெனவே வாழ்ந்து
எமக்கு சிறந்த வாழ்வு தந்தாய்
எம்மை மீளாத் துயரில் விட்டுச் சென்றதேன்
கணப் பொழுதில் காலதேவன்
உங்களைக் கவர்ந்து சென்றதேனோ?

நாளை 11-09-93 (சனிக்கிழமை) நடைபெற விருக்கும் அந்தியேட்டி வைபவத்திலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
ஆன்மாவின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்

(6, பண்டிதர் மாணிக்கதியாகராசா வீதி,
கல்லாகம்.

குறிப்பு:- 29 - 08 - 93 வீரகேசரியில் 12 - 09 - 93இல் அந்தியேட்டிக்கிரிகை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது இது தவறாக பிரசுரிக்கப்பட்டமையால் 11 - 09 - 93 அன்று அந்தியேட்டிக்கிரிகை நடைபெறும் என அறியத்தருகின்றோம். (27246)

பரிசளிப்பு விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளி காலை 9 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கலைப்பீடாதி பேராசிரியர் பெர். பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் கலந்து கொள்வர். (த)

துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் சடலம்

யாழ்ப்பாணம், செப். 10
மட்டக்களப்பு மாவடிமடம் படுவாங்கரையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று செவ்வாய் பகலையர் அப்பகுதியில் அடிக்கடி நடத்தும் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தவரின் சடலமாக அது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

உயிரிழந்தவர் 7ஆம் கட்டையடியைச் சேர்ந்த கிறிதரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (இ-5)

BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

93 O/L

வினா - விடை
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

(எமது வழமையான ஆசிரிய குழுவினால்)
(இ-6073)

நவகைடன்ஸ்

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L - 94

(1 வருடம்)

வார இறுதி வகுப்பு

★ வரவு-செலவுத் திட்டம்
11-00 a.m.
திரு. மன்மதராஜன்

★ புதிய பதகானர் சேரல்
12-00
ஸ்ரீகாந்தன்

★ வர்த்தகம்
பகுதி 1 மீட்டல்
1-00 p.m.
திரு. தேவா

இந்து நாகரிகம்
இந்து சமயம் } 2. p m

திரு. சிவமகாலிங்கம்
இலக்கணம் 3 p.m.
திரு. கணேஷ்

அரசியல் பகுதி II
4 p.m.
திரு. பிரதீபன்
(இ-6078)

A/L 94

மீட்டல் வகுப்பு

தமிழ்: திரு. குழந்தைவேலு
ஆரம்பம்: 11 — 09 — 1993
தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புக்கள்
பிரிவு II ஆரம்பம்: 13 — 09 — 1993

உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(6471)

மரண அறிவித்தல்கள்

தம்பு மகாதேவன்

நீர்வேலி வடக்கு காலஞ்சென்ற தம்பு - சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் மகாதேவன் (முன்னாள் இ.போ.ச. ஆதிகாரி) 08 - 09 - 1993 இல் கனடாவில் காலமானார்.

இவர் சந்திரமலரின் (கனடா) அன்புக் கணவரும், பங்கஜம், அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (கனடா — மூன்னாள் தொழிலதிபர் இலங் தொழில் நிலைக்களம்), பத்மநாதன் (போதனாசிரியர் தொழில் நிலைக்களம்" யாழ்ப்பாணம்), காமேசன் (எலெக்ரிரவியல் விரிவுரையாளர் புறாணை — முன்னாள் தொலைத் தொடர்பு பிரதம பொறியியலாளர், கொழும்பு), தவிகாசலம், கசினாதேவி, தர்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாவிட்டபுரம் வ. கனகரத்தினத்தின் பேறாமகனும், குகதாசனின் (சவுதிஅரேபியா) ஒன்றுவிட்ட சகோதரனும், இ. கனகரத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், மகாலிங்கம் [இ.போ.ச. வவுனியா], இரத்தினசிங்கம் [அமெரிக்கா], பாலசிங்கம், தவராசசிங்கம் (கனடா), சண்முகலிங்கம், இராசமணி, சோதிமலர், தவமணி, புண்ணியமூர்த்தி (ஜேர்மனி), கவாமிநாதன், சந்தானலட்சுமி (கனடா), மங்கையேவரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பு பத்மநாதன்
(சகோதரன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(27252)

கோமாலபிள்ளை ஏகாம்பரம்

கருவிகளைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கோமாலபிள்ளை ஏகாம்பரம் (கொழும்பு பழைய சோனகத்தெரு ஏகாநந்தன் கொம்பனி பிறைவேற் லிமிற்றட் — வவுனியா ராணி மில்) 08-09-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோமாலபிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற வைரவப்பிள்ளை சிதேவிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் இரத்தினேஸ்வரன் (ஏகாநந்தன் றேடிங் கம்பனி கொழும்பு), சசிகாந்தராஜா (பொறியியலாளர் லண்டன்), ஆகியோரின் அருமைத் தந்தையும் விக்கிரமதாசா, நித்திலா (லண்டன்) ஆகியோரின் மாமனும் செந்தூரன், பவன் ஆகியோரின் அருமைப் பேரனும், பவானியின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற செல்லம்மா, கமலம், தம்பிப்பிள்ளை (சோனாபதி), காலஞ்சென்ற இராசப்பா, பொன்னம்மா, பத்மநாதன், பாக்கியம், இராசலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும் கமலாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற சுப்பையா, மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நாதனின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்
கி. வைத்திலிங்கம்

80, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (27248)

திருமதி லோகாம்பிகை நடராசா

(சரவணையூர் இளைப்பாறிய ஆசிரியை)

சரவணையூர் இளைப்பாறிய ஆசிரியை திருமதி லோகாம்பிகை நடராசா நேற்று (09-09-93) காலமாகி விட்டார்.

இவர் நடராசாவின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணையூர் முதலியார் சரவணிங்கம் கமலாம்பிகை தம்பதியின் புதல்வியும் திருமதி கௌரி பரந்தாமனின் (ஆசிரியை மகிமையர்க்கரசி வித்தியாலயம்) அன்புத் தாயாரும் வ. பரந்தாமனின் (பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில பயிற்சி நெறி) அன்பு மாமியாரும் வரதராசா (கொழும்பு), காலஞ்சென்ற ஆசிரியை நிலவதி திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பத்மநாதன் (இளைப்பாறிய புகையிரத நிலைய இலிகிதர்), நா. தவபாலன் (ஆசிரியர் ஊர்காவற்றுறை செம். அன்ரனீஸ் கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தி, திருநாவுக்கரசு, யொகராதேவி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணிவரையில் இல்லத்தில் நடைபெற்றபூதவுடல் தகனக் கிரியைக்காக கோக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நடராசா
(கணவன்)

15/3, தாவளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (27253)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 498/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-09-1993 இல் அச்சிடு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org